வருடாந்த அறிக்கை
2010

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகக்ழகம்

அறிமுகம்

ஓரளவு சுயாதீனத்தன்மைகொண்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இதன் நோக்கங்களாவன பட்டப்பின்படிப்பு வழிகாட்டல்கள், பயிற்சி, ஆராய்ச்சி என்பவற்றை வழங்குவதனூடாகவும் முகாமைத்துவ மற்றும் நிருவாக ஆய்வுகளின் பல்வேறு பிரிவுகளில் அபிவிருத்தியை மேற்கொள்வதனூடாகவும் இலங்கையில் முகாமைத்துவத்தில் உயர் கல்வியையும் தொழில்வாண்மையையும் மேம்படுத்துவதாகும். இன்று இந்நிறுவகம் ஆயிரக்கணக்கான சிரேட்ட மட்ட முகாமையாளர்கள், நிருவாகிகளுக்கான கற்றல் மற்றும் திறன் விருத்திக்கான சவால்மிக்க வாய்ப்புகளை வழங்கி பரந்த அளவில் தொழில்சார் முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியின் தேசிய நலன்களுக்காக பணிபுரிகின்றது. இலங்கையில் உயர் முகாமைத்துவ கல்வியின் முன்னோடியாக இருந்து முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது முகாமைத்துவ அனுபவத்தை கண்டுபிடித்து, பரப்புகின்றவர்களுக்கும் உயர் கற்றல் மாற்றீடுகளை தேடுவோருக்கும் தலைமைத்துவத்தையும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் வழங்குகின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழான கட்டளைச்சட்டத்தினால் 1986 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது இலங்கை பல்கலைக்கழக முறைமையிலுள்ள ஏழு பட்டப்பின்படிப்பு நிறுவகங்களில் ஒன்றாகும். ஒப்பீட்டு ரீதியில் இது புதிய நிறுவனமாக இருந்தபோதிலும் அவற்றில் மிகஅதிகமான மாணவர் தொகையை கொண்டு நாட்டின் பல்கலைக்கழக முறைமையிலுள்ள ஒரே ஒரு சுய நிதியிடல் உயர் கல்வி கற்றல் நிறுவனமாகவும் உள்ளது.

நிறுவகத்தின் வரலாறானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவொன்று 1981 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாகின்றது. பிரிவானது இரண்டு கனேடிய பல்கலைக்கழகங்களான ஒட்டாவா பல்கலைக்கழகம் மற்றும் கால்டன் பல்கலைக்கழகத்துடன் சீடாவின் கீழான கூட்டாண்மையுடன் முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு கற்கைகளை ஆரம்பித்தது. 1986 இல் பிரிவானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் கீழான ஒரு தனியான நிறுவகமாக தரமுயர்த்தப்பட்டது. 1995 ஆம்

ஆண்டில் கொழும்பு 8, லெஸ்லி லணகல மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு நகர்த்தப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஐந்தாண்டு கால பணிகளில் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் முகாமைத்துவத்தில் கீர்த்திமிக்க நிலையமொன்றாக மாறுவதற்கான அபிலாசை எடுத்துச்செல்லப்படும்.

இலங்கையில் முகாமைத்துவத் துறையில் உயர் கல்வியை வழங்கி அபிவிருத்தி செய்வதற்கான மத்திய நிலையமொன்றாக மாறுவதற்கான இதுவரையான நிறுவகத்தின் முன்னேற்றத்தை தொடருகின்ற தர்க்கரீதியான கூற்றே இதுவாகும். நிறுவகத்தின் அடுத்த கட்ட அபிவிருத்தி யாதெனில் பிராந்தியத்தில் முகாமைத்துவத்துறையில் கீர்த்திமிக்க நிலையமொன்றாக தன்னை அர்ப்பணிப்பதாகும்.

பணிக்கூற்று

நோக்கு, முயற்சி, அமைதி, கட்டுப்பாடு மற்றும் கவனிப்பு ஆகிய வழிமுறைகளுடன் முகாமைத்துவ கல்வியையும் புத்தாக்கத்தையும் வடிவமைப்பதாகும். எமது பணி யாதெனில் இந்த ஐந்து வழிமுறைகளினூடாக தமது ஆண்களதும் பெண்களதும் சக்திகளை வழிநடாத்தக்கூடிய தலைவர்களை உருவாக்குவதோடு சமுதாயத்தின் நன்மைக்காக தமது முயற்சியான்மைகளில் பெறுமானங்களை உருவாக்குகின்ற முகாமையாளர்களை தயார்படுத்துவதுமாகும்.

பெறுமானங்கள்

நவீன காலத்தில் நாகரீகமடைந்த மனித முன்னேற்றமானது பின்வரும் விடயங்களை தேவைப்படுத்துகிறது என முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் பலமாக நம்புகின்றது:

- செயற்பாட்டு கற்றலின்மூலம் அறிவுசார் கற்கை பலமாக ஆதரவளிக்கப்படுகின்றது,
- செயலாற்றுகைக்கான தொடரான அபிவிருத்தி தேர்ச்சி,
- ஒழுங்கமைக்கப்பட்ட தொழில்துறைக்கான உறுதியான அர்ப்பணிப்பு
- பெறுமான உருவாக்க நோக்கத்திற்கான புத்தாக்கத்திற்கான அர்ப்பணிப்பு

இவையே நிகழ்ச்சித்திட்ட கருதுகோளின் நான்கு தூண்களுமாகும். நிறுவகத்தினுள் நுழைகின்ற அனைவரும் இதை பூர்த்திசெய்தவர்களாக இருக்க வேண்டுமென நாம் ஆதரவுடன் எதிர்பார்க்கின்றொம்.

மேற்குறிப்பிட்ட நன்மைகள் ஐந்து விடய கூட்டாண்மை பெறுமதி முறைமையினால் பலப்படுத்தப்பட்டுள்ளது.:

- நாம் செய்யும் அனைத்திலும் பலவீனத்தை அகற்றுதல்.
- பெறுமதியான அறிவு உருவாக்கத்தில் சுறுசுறுப்பாக இருத்தல்.
- அறிவை பெறுதல் மற்றும் பரப்புதலில் நிபுணத்துவம்.
- நாம் செய்யும் அனைத்திலும் தொடரான முன்னேற்றம்.
- எமது அனைத்து தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளில் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும்.

இலக்குகள்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் அடுத்த ஐந்து வருடங்களுக்கான நான்குமுனை கூட்டாண்மை இலக்குகள் பின்வருமாறு உள்ளது:

- போட்டித் தன்மையை முறியடித்து நிறுவகம் தொழிற்பட விரும்புகின்ற சந்தைகளில் தொடர்ந்தும் தலைவராக இருப்பதோடு தேசத்தின் வியாபார பாடசாலையாகவும் தொடர்ந்து இருத்தல்.
- வளர்ந்துவருகின்ற முகாமைத்துவ துறை கற்கையின் தேசிய நீரோட்ட பாடநெறிகளை விஸ்தரிப்பதனூடாக நிறுவகத்தின் பொருத்தப்பாட்டை உயர்த்துதல்.
- நிறுவகத்தின் குறிப்பான குறுங்கால நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நடத்தை ஊடாக தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் முகாமைத்துவ தேர்ச்சிகளை மேம்படுத்ததல்.
- தொடர்ந்தும் கற்கை நெறிகளின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் உயர்த்துதல்.

பணிப்பாளரின் மீளாய்வு:

முப்பது வருடங்களுக்கு முன்னர் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது ஸ்தாபகப் பணிப்பாளரின் தலைமையில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டதினூடாக இலங்கைக்கான முகாமையாளர்களை விருத்திசெய்கின்ற தேசிய பணியில் காலடியெடுத்து வைத்தபோது உயர் மட்டத்தில் தமுகாமைத்துவ கல்வி பற்றி நாட்டில் சிறியளவான கரிசனையே இருந்தது. அரசாங்கமோ தனியார் துறையோ இதில் ஆர்வம் காட்டவில்லை. ஆதலால் ஸ்தாபகப் பணிப்பாளர் இலங்கையில் எம்பீஏ பட்டப் பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்கான உதவியை பெறுவதற்கு கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையோடு பேச்சுவார்த்தை நடாத்தினார். 1980 களின்

ஆரம்பத்தில் அப்போது நாட்டில் ஒரு தனியுரிமை சந்தை உருவாக்கப்பட்டிருந்தது இப்போது சுமார் 30 வருடங்களின் பின்னர் சந்தை மிகவும் வேறுபட்டதாகவும் போட்டித்தன்மை கொண்டதாகவும் உள்ளது.

இன்று நாட்டிலுள்ள எட்டு பல்கலைக்கழகங்கள் எம்பீஏ பட்டத்தையும் அதையொத்த உயர் பட்டங்களையும் வழங்குகின்றன. பத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு எம்பீஏ பாடநெறிகள் மு.ப.நிறுவகத்துடன் போட்டியிடுகின்றன. இந்த பாடநெறிகள் வெளிநாட்டு நிதிகளை பயன்படுத்தி விளம்பரப்படுத்தப்படுவதோடு மு.ப.நி தனது எம்பீஏ பாடநெறிக்கு அறவிடுகின்ற கட்டணத்தில் இரண்டு மடங்கிட்கும் அதிகமான அளவை அறவிடுகின்றன. நுழைவு தகைமைகளை குறைத்தல், வருகைதரு விரிவுரைகளுக்காக உள்ளூர் பல்கலைக்கழக பீடத்தினை பயன்படுத்துதல், அவை கூறிக்கொள்கின்ற "கீர்த்திமிக்க' பெயர்கள், எமது சுயமானவற்றை விட எந்தவொரு வெளிநாட்டு பட்டமும் உயர்ந்தது என்ற சிந்தனை நம்பிக்கையில் இருக்கின்றவர்களின் தங்கியிருத்தல் என்பவற்றின் காரணமாக போட்டித்தன்மை ஏற்படுகின்றது.

மேற்படி விடயமானது தனது சுயமான நிதியிடலில் இயங்குகின்ற முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு பெரும் சவாலாக உள்ளது. தனியார் நிறுவகங்கள் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் உட்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் வரையறைகளுக்கு உட்டபட்டதாக இல்லை. மேலும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது சம்பளங்கள், மின்சார கட்டணங்கள், காப்புறுதி, வரிகள், வருகைதரு விரிவுரையாளர்கள், கட்டிட பராமரிப்பு, பாதுகாப்பு, கருவிகள், வழங்கல்கள், போக்குவரத்து மற்றும் கணக்காய்வு கட்டணங்கள் என்பனவற்றுக்காக கொடுப்பனவுகளை உழைக்கவும் வேண்டியுள்ளது. இது இலங்கை அரசாங்கத்தில் மிகவுமே ஒரு தனித்துவமான நிலைமையொன்றாக இருப்பதோடு அரசாங்க அலுவலர்கள் தமது சம்பளங்களை உழைத்து, 26 ஊழியர்களுடன் தமது நிறுவனத்தை எடுத்துச்செல்லவும் வேண்டியுள்ளது.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் 2009 – 2011 இற்கான கூட்டாண்மை திட்டத்திற்கமைவாக முகாமைத்துவ சபையினால் வழிகாட்டப்பட்டது. நிறுவகத்தின் சுய நிதியீட்ட நிலைமையை பேணுவதற்கான ஆராய்ச்சி, பட்டக் கற்கைகளை, பயிற்சி மற்றும் உசாவுகை சேவைகள், புதிய கல்விச் செயற்பாடுகள் நிறுவகத்தின் சுய நிதியிடப்பட்ட நிலைமையை பேணுவதற்காக வருமானத்தை உழைத்தல் ஆகிய பிரதான துறைகளில் முழுதுமளாவிய பெறுபேறுகள் ஊக்கமளிப்பதாக உள்ளது.

அடைவுகள்:

எமது நோக்கங்கள் யாதெனில் முகாமைத்துவம் மற்றும் நிருவாக கற்கைகளின் பல்வேறு துறைகளிலும் பட்டப்பின்படிப்பு, வழிகாட்டல், பயிற்சி, ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்தியை வழங்குவதனூடாக இலங்கையில் முகாமைத்துவ துறையில் உயர்

கல்வியையும் தொழில்திறனையும் ஊக்குவிப்பதாகும். இன்று சிரேட்ட மட்ட முகாமையாளர்கள் மற்றும் நிருவாகிகள் ஆயிரக்கணக்கானோருக்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்திக்கான சவால்மிக்க வாய்ப்புக்களை வழங்கி விரிவான அளவில் தொழில்சார் முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியின் தேசிய நலன்களுக்கு சேவையாற்றுவதாகும்.

இலங்கையில் உயர்தர முகாமைத்துவ கல்வியில் முன்னோடியாக இருந்து முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானமானது வியாபாரத் துறையில் முகாமைத்துவ அனுபவத்தை கண்டுபிடித்து, பரப்புகின்றவர்களுக்கும் மாற்று உயர் கற்றலை தேடுவோருக்கும் தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றது.

தெற்காசியாவில் உயர்தர முகாமைத்துவ கல்வியின் முன்னோடி என்ற வகையில் முகாமைத்துவத்தின் தேசிய மற்றும் சர்வதேச பின்னணியில் முகாமைத்துவ அறிவையும் நடைமுறையையும் இணைக்க நாம் முயற்சிக்கின்றோம்.

எமது பிரதான பணி முகாமைத்துவ கல்வியை நோக்கு , முயற்சி, அமைதி, கட்டுப்பாடு மற்றும் கவனிப்பு என்ற ஐந்து வழிமுறையில் முகாமைத்துவ கல்வியையும் புத்தாக்கத்தையும் வடிவமைப்பதாகும்; எமது முழுதுமளாவிய பணி யாதெனில் ஐந்துமுனை வழியினூடாக தமது ஆண்களினதும் பெண்களினதும் சக்திகளை நெறிப்படுத்துகின்ற தலைவர்களை உருவாக்குவதும் சமுகத்தின் நலனுக்காக தமது தொழில்முயற்சிகளில் பெறுமதியை உருவாக்குகின்ற முகாமையாளர்களை வெளிக்கொணர்வதுமாகும்.

வசதிகளின் மேம்பாடு

மாணவர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்கும் நோக்குடன் இவ்வாண்டுக் காலப்பகுதியில் பின்வரும் புதிய வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- உடற்பயிற்சி நிலையம் – நிறுவகத்தின் எம்பீஏ பாடநெறியை தொடருகின்ற பல்வேறு மாணவ முகாமையாளர்கள் தொழில் – வாழ்க்கை – கற்றல் ஆகிய சமநிலையை பேணமுடியாதவர்களாக உள்ளனர். உடநலத்தை புறக்கணிப்பது அழுத்தத்திற்கும் சுகையீனத்திற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக மாணவ முகாமையாளர்கள் வாழ்க்கையின் நான்கு முகங்களான உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக அம்சங்களின் நடுநிலைமைத் தன்மையை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இந்த நோக்கத்தை அடைய நிலையம் உதவுகின்றது.

  இந்த நோக்கத்திற்காக கட்டிடத்தின் தள மாடியிலுள்ள களஞ்சியப் பகுதியின் பயன்படுத்தப்படாத பகுதி உடற்பயிற்சி நிலையமொன்றாக மாற்றப்பட்டது.

கருவிகளின் ஆரம்ப செலவை ஈடுசெய்வதற்காக கூட்டாண்மை அனுசரணை இலங்கை ரெலிகொம் இனால் வழங்கப்பட்டது.

- இணைய அடிப்படையிலான மாணவர் முன்னேற்ற அறிக்கையிடல் முறைமை – இணையத்தினூடாக எம்பீஏ நிகழ்ச்சித்திட்டத்தின் போதான இற்றைப்படுத்தப்பட்ட தனிப்பட்ட கல்விசார் செயலாற்றுகையை கண்டறிவதற்கு மாணவர்களுக்கான முறைமை விருத்திசெய்யப்பட்டது. ஒவ்வொரு பாடநெறி தொடர்பில் பெற்ற புள்ளிகள், பாடநெறி சராசரி, மாணவர் தொகுதி அடிப்படையில் அவர்களது நிலைமை, என்பன அவர்கள் செல்ல முடியுமான சில தகவல்களாகும்.

- குறிப்பாக மழை காலங்களில் உடனடியாக பயன்படுத்தக்கூடிய இடைத்தொடர்பை பயன்படுத்தி கார் தரிப்பிடம் மீள்நிர்மாணிக்கப்பட்டது.

- பீட விரிவுரை அறைகள், குறிப்பாக அவற்றின் கூடங்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய கதிரைகள், வாங்குகள் மாணவர் கற்கை பகுதிக்கும் இரண்டு விரிவுரை அறைகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டன.

- விரிவுரை அறைகளில் ஒலி முறைமை மேம்படுத்தப்பட்டது.

- கட்டிடம் வர்ணப்பூச்சு பூசப்பட்டு பராமரிப்பு நடவடிக்கை தொடர்ந்தது.

- மாணவர் வருகை கைநூல் இடாப்பிற்கான தேவையை அகற்றுவதற்கான தன்னியக்கமயப்படுத்தப்பட்ட பட்டை குறியீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

- இவ்வாண்டுக் காலப்பகுதியில் பீட உறுப்பினர்களின் இணைய ரீதியான மாணவர் மதிப்பீடு அறிமுகப்படுத்தப்பட்டதோடு பாடப்பொருட்களின் இணைய பதிவேற்றம் மற்றும் மாணவர் பாடநெறி புள்ளிகளின் இணைய இற்றைப்படுத்துதல் என்பன தொடந்தன.

பயிற்சியும் உசாவுகையும்

அதிகளவு எண்ணிக்கையிலான EDPs 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது

	நிறுவனம்	நிகழ்ச்சித்திட்டம்	ஆரம்பம்	முடிவு
1	SLASSCOM இலங்கை மென்பொருள் கம்பனிகள் சங்கம்	முகாமைத்துவத்தில் பட்டபின்படிப்பு சான்றிதழ் பாடநெறி	ஒக்டோபர் 14, 2009	பெப்ருவரி 05, 2010
2	ஹேமாஸ் ஹோல்டிங் பி.எல்.சி	பொது முகாமைத்துவ பாடநெறி	நவம்பர் 07, 2009	மார்ச்சு 06, 2010
3	ஹட்டன் நஷனல் வங்கி	நிறைவேற்று	மார்ச்சு 06,	யூலை 03,

		முகாமைத்துவத்தில் சான்றிதழ் பாடநெறி	2010	2010
4	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	கல்விசார் பதவியினருக்கான தொழில்சார் பயிற்சி தலைமைத்துவ அபிவிருத்தி	பெப்ருவரி 24, 2010	பெப்ருவரி 26, 2010
5	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	கல்விசார் பதவியினருக்கான தொழில்சார் பயிற்சி முகாமைத்துவ அபிவிருத்தி	மார்ச்சு 04, 2010	மார்ச்சு 05, 2010
6	வ/ப சன்டெல் நிறுவனம்	முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பாடநெறி	மார்ச்சு 06, 2010	ஏப்ரல் 24, 2010
7	இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை	முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறி	மார்ச்சு 15, 2010	ஏப்ரல் 25, 2010
8	ஸ்ரீ லங்கா எயர்லைன்	அனுமதிப்பரீட்சை, வினாத்தாள் புள்ளியிடல் என்பவற்றுக்காக பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்த்தல்	ஆகஸ்ட் , 2010	ஆகஸ்ட் 09, 2010
9	இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் - சீபெட்கோ	சாதகமாக மனோபாவம், ஊழியர் அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவம் பற்றிய செயலமர்வு	செப்டம்பர் 11, 2010	செப்டம்பர் 25, 2010

பாடநெறித் திட்டமிடலும் வழங்குகையும்

போட்டித்தன்மையில் முதலிடத்தில் இருப்பதற்காக எம்பீஏ பாடநெறியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்கு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை மாணவர் முகாமையாளர்களுக்கு வழங்கும் பெறுமதியும் மேம்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

அ. ***பாட விபரங்கள்*** கூர்மையான உள்ளடக்கத்தையும் தெளிவான வழிகாட்டலையும் வழங்குவதற்காக மீள்வடிவமைக்கப்பட்டது. கட்டாய வாசிப்பு பட்டியலுடன்கூடிய பூரணமான, தெளிவான திட்டமிடப்பட்ட பாடநெறி கட்டமைப்பு (1) பாடநெறி ஆயத்தம் மற்றும் முன்வைப்பு என்ற வகையில் விரிவுரையாளர்களுக்கும் (2) குறிப்பான அமர்வொன்றுக்கு முன்கூட்டியே தற்போது தயார்படுத்த முடியுமான மாணவர் முகாமையாளர்களுக்கும் உதவியுள்ளது. (மாதிரி பாடநெறி விபரத்தை தயவுசெய்து இணைக்க).

ஆ. *முன்வைக்கும் அமைப்பு* : இரண்டு குறிப்பான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று மணித்தியால அமர்வின் மூன்றில் ஒரு பகுதி உரிய வழமையான விரிவுரைக்கு அதாவது விரிவுரை ஆற்றுதல் – ஒதுக்கப்பட்டது. அமர்வின் எஞ்சிய பகுதி காண்பித்தல் உதா (வீடியோ), கேட்டல் (கலந்துரையாடல் / விவாதம்) மற்றும் செய்தல் (பயிற்சியும் விடய ஆய்வும்) என்றவாறு முதன் முதலாக நேரம் ஒதுக்கப்பட்டது. பீடமானது மாணவர் முகாமையாளர்கள் மீது சாதகமான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு நான்கு வகை முன்வைத்தல் வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டுமென்பதை அறிந்துள்ளதோடு தேவையான கற்றல் விளைவுகளையும் அடையவேண்டும் என்பதையும் அறிந்து வைத்துள்ளது.

இ. *வருகைதரு விரிவுரைகள்:* தெரிவுசெய்யப்பட்ட தலைப்புகளில் விசேட விரிவுரைகளை நிகழ்த்த கைத்தொழில்துறையில் இருந்து பிரமுகர்கள் வெகுவாக பங்கேற்கின்றனர். இந்த அமைர்வுகள் முன்திட்டமிடப்பட்டதோடு பாடநெறி வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விசேட தோற்றங்கள் பயன்மிக்கதாக உள்ளதோடு, அவை உண்மையில் மு.ப.பி எம்பீஏ பாடநெறிகள் மற்றும் அதன் ஏனைய போட்டியாள்களிடையே முக்கிய வேறுபாட்டை காட்டிநிற்கின்றது.

ஈ. *புள்ளிகளை வெளியிடல்:* பீடம் புள்ளிகளை உரிய காலத்திற்கு வெளியிடுவதற்கான ஒரு காலக்கெடுவை அமைத்திருக்கின்றது. அதாவது இறுதி பரீட்சையிலிருந்து 21 நாட்களாகும். இது கண்டிப்பாக பின்பற்றப்படுவதோடு பீடத்தின் ஒரு கே.பி.ஐ. யும் (பிரதான செயலாற்றுகை சுட்டிக்காட்டி) கொண்டமைந்திருக்கின்றது.

உ. *மாணவர் மதிப்பீடு:* இது பாடநெறி குறித்த மாணவரின் கருத்தோட்டத்தின் முக்கியதொரு மதிப்பீடாகும். தனிப்பட்ட மாணவர்களினது தவணை முடிவு

மதிப்பீடானது சுருக்கமாக பெறப்பட்டு மாணவர் முகாமையாளர்களினால் கருதப்பட்டவாறான அவர்களது செயலாற்றுகை தொடர்பில் சம்பந்தப்பட்ட பீட அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. கே.பி.ஐ இது இன்னொரு பீட.மாக கருதப்படுகின்றது.

ஊ கே.பி.ஐ (பிரதான செயலாற்றுகை சுட்டிக்காட்டி) மற்றொரு பீடமாக ஒவ்வொரு பீட உறுப்பினரிடமிருந்தும் தேவையான 1-5 அளவில் 4 இல் ஒன்றின் முழுதுமளாவிய மதிப்பீடு.

மேலே குறிப்பிட்ட கே.பி.ஐ (பிரதான செயலாற்றுகை சுட்டிக்காட்டி) பரவல் பீடத்திற்கான 4 x 4 x 3 சூத்திரத்தை உருவாக்குகின்றது.

4 = நான்கு வெளிப்படுத்துகை அமைப்புகளின் கூட்டு
4 = ஐவரில் நான்கு பேர் மாணவர் மதிப்பீடு
3 = பரீட்சை திகதியலிருந்து 3 வாரத்தினுள் இறுதி புள்ளிகள் வெளியிடப்படும்.

நிகழ்ச்சி வெளியீட்டின் முக்கிய அம்சம் யாதெனில் வதிவிட செயலமர்வாகும். வழமையாக அவை நகரிலிருந்து தூரமாக ஹோட்டல்களில் இடம்பெறுகின்றன இவ்வாண்டுக்காலப்பகுதியில் அத்தகைய மூன்று செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இந்த செயலமர்வுகள் மாணவர்களுக்கும் பீடத்திற்கும் குழு அமைப்பில் படைப்பாற்றலை ஊக்கப்படுத்துகின்ற ஓய்வான சூழலொன்றில் சில கூறுகளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட விடயங்களை பரீட்சிப்பதற்கு உதவியளிக்கின்றது.

அபிவிருத்திக்கான 5 எம் சட்டகம்

எதிர்வரும் வருடங்களில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் முன்னணியில் திகழ்வதற்காக வேண்டி ஐந்து பரிமாண நிகழ்ச்சி நடவடிக்கையொன்று பின்பற்றப்பட்டது. 5 எம் சட்டகமானது சந்தை, உறுப்பினர்கள் (பீடமும் பதவியினரும்), ஆலோசகர்கள் (பின்னூட்டலையும் வழிகாட்டலையும் வழங்க குறித்துரைக்கப்பட்ட பீடம்) கண்காணிப்பாளர்கள் (ஒவ்வொரு தொகுதிக்குமான மாணவர் கண்காணிப்பாளர்கள்) எம்பீஏ (பழையமாணவர்கள் சங்கம்) ஆகியோரை கொண்டதாக உள்ளது.

பட்டப்பின்படிப்பு வெளியீடு

இவ்வாண்டுக் காலப்பகுதியில் முதுமாணிப்பட்டம், பட்டப்பின்படிப்பு டிப்ளோமா தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது:

வியாபார நிருவாகத்தில் கலாநிதிப் பட்டம்	01
வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம்	327
வங்கியியல் மற்றும் நிதியியல் எம்பீஏ பட்டம்	02

மனிதவள முகாமைத்துவத்தில் எம்பீஏ பட்டம்	42
சுங்க நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம்	60
பொது நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம்	01
பொது நிருவாகத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம்	01
வியாபார நிருவாகத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம்	03
வங்கியியல் மற்றும் நிதியியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம்	01

பட்டதாரிகளின் மொத்த எண்ணிககை 438

இந்த பட்டதாரிகள் தமது பட்டப்பின்படிப்பு பட்டங்களை 2011 யூலை 23 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வைபவத்தில் பெற்றுக்கொண்டனர்.

விளம்பரமும் புகழுருவும்

2010 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் அனைத்து செயற்பாடுகளையும் நிகழ்வுகளையும் பிரபல்யப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிருவகத்தின் தோற்றத்தை அதிகரித்து பத்திரிகையும் தொலைக்காட்சியும் அனைத்து செயற்பாடுகளையும்/நிகழ்வுகளையும் விரிவாக உள்ளடக்கியிருந்தது.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு ரீசேட்டும் தொப்பியும் வடிவமைக்கப்பட்டு 2009 மார்ச்சில் மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் விற்பனைசெய்யப்பட்டன.

ஆராய்ச்சி, வெளியீடுகள் மற்றும் நூலகம்.

ஆராய்ச்சியானது இலங்கையில் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது. இத்துறையில் ஆராய்ச்சி மரபை நாம் விருத்திசெய்ய வேண்டியிருப்பதோடு எமது பிரதான ஆராய்ச்சி முயற்சிகள் எவ்வாறு ஒழுங்குசெய்யப்பட்டு மேம்படுத்தப்பட முடியும் என்பதற்கான மாதிரியை கண்டறிவதே உண்மையான சவாலாகும்.

ஆராய்ச்சியின் பிரதான நோக்கு (காண்புகளை வெளியிடல்) யாதெனில் முகாமைத்துவத்தை தொழிலொன்றாகவும் அறிவியல் ஒன்றாகவும் பலப்படுத்துவதற்கான உள்ளக முகாமைத்துவ உள்ளடக்கத்தை ஆய்ந்தறிவதாகும்.

முறைமைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான தர்க்கரீதியான அனுகுமுறை மேம்படுத்தல் வழிமுறைகளை நாம் நாடுவதோடு அதன்மூலம் வெளியீடுகளின் தரம் குறிப்பிடத்தக்க மட்டங்களுக்கு உயர்த்தப்பட முடியும். முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி நோக்கங்கள் இலங்கை பின்னணியில் அறிவுத்துறையில் முக்கியமான இடைவெளிகளை தீர்ப்பதோடு 'அறிவை சமூகரீதியாக' பயனுள்ளதாக மாற்றவேண்டிய தேவையுமுள்ளது.

1996 இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் காலாண்டு சஞ்சியான ***இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையை*** தொடர்ந்தும் வெளியீடுதல் மற்றும் கலந்துரையாடலுக்கான மன்றமொன்றாக இருந்து வருகின்றது. இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையின் பிரதான நோக்கம் யாதெனில் முகாமைத்துவத்துறையில் விடயங்கள், நடைமுறைகள் அபிவிருத்தி சார்ந்த விடயங்களுக்கான ஊடகமொன்றாக இருப்பதோடு ஆராய்ச்சியின் பெறுபேறுகளை பரப்புவதற்கும் இந்த துறைகளில் கற்பதற்குமான ஊடகமொன்றாக இருத்தலுமாகும். சஞ்சிகையானது முகாமைத்துவத் துறையில் புத்திஜீவிகளும் செயற்பாட்டாளர்களும் தமது பணிகளை வெளியிடுவதற்கான ஊடகமொன்றாகவும் இருப்பதுமாகும்.

நவீன முகாமையாளர்களின் எழுச்சிபெற்று வருகின்ற தேவைகளுக்கு பதிலளிக்கும் முகமாக வருடத்திற்கு இரு முறை வெளியிடப்படுகின்ற ***தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகை*** ஆரம்பித்து வைக்கப்பட்டது. சந்தைக்கு தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகையை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் யாதெனில் விளங்குவதற்கு இலகுவான முறையொன்றில் முன்னேற்றகரமான முகாமைத்துவ அறிவை பரப்புவதாகும். அது குறிப்பான தொழிற்பாட்டு சார்பை கொண்டதாக இல்லை மாறாக சிக்கலான குழப்பகரமான சூழலொன்றில் தொழிற்படுகின்ற நவீன முகாமையாளர்களுக்கான சமகால மற்றும் முக்கியத்துவமிக்க விடயங்களுக்கு தீர்வு காண்கின்றது.

வாசிப்பதற்கு இலகுவான, உள்ளடக்கத்தில் செறிவுள்ள கட்டுரைகளின் திரட்டலொன்றை சஞ்சிகையின் இரண்டாம் இதழ் உள்ளடக்கியுள்ளது.

நூலகத்தின் விரிவாக்கம் (விடியோ நூலகம் உள்ளிட்ட) 2010 பெப்ரவரியில் ஆரம்பமானது. விரிவாக்கல் திட்டத்திற்காக ரூபா 2 மில்லியன் தனியாக ஒதுக்கப்பட்டது.

மேலதிக பாவனையாளர்களை உள்ளவாங்கும் வகையில் நூலகம் தரமுயர்த்தாப்பட்டதோடு பாவனையாளர்களின் வசதிக்காக பின்வரும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன:

ஆராய்ச்சி திரட்டுகையும் தகவல் உதவியும்
உள்வரியான நூலக கடன்கள்
விடய உசாத்துணை நூல்களும் செய்துகாட்டல்களும்
இணைய தொடர்புகளும் விடியோக்களும்
தானியங்கி பெயர்ப்பட்டியல்

2010 ஆம் ஆண்டின் இறுதியளவில், முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் 30, புத்தகங்களும் 60 பருவ வெளியிடுகளும் சஞ்சிகைகளும் வாசிப்புக்காக கிடைக்கப்பெற்றன.

நூலகத்தில் ஒரு வினைத்திறன்மிக்க சேவையை உறுதிப்படுத்துவதற்காக நூலக நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக பட்டை குறியிட்ட சுழற்சி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

வியாபார மற்றும் சந்தை தொடர்புகள்: முகாமைத்துவ அபிவிருத்தியும் பயிற்சியும்.

கொள்கை விடயமொன்றாக நிறுவகமானது நடைமுறை முகாமைத்துவ பிரச்சினைகளுக்கான வெளிப்படுத்தல் ஊடாக பீட கற்பித்தலின் உள்ளடக்கம் மற்றும் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச்செய்யக்கூடிய முகாமைத்துவ உசாவுகை ஒப்படைகளை பொறுப்பேற்கின்றது. 2010 ஆம் ஆண்டில் கூட்டாண்மை திட்டமிடல், நிறுவனரீதியான மீள்கட்டமைப்பு, தொழில் பகுப்பாய்வும் ஊதியக் கொள்கையும், பயிற்சியும் அபிவிருத்தியும் மற்றும் நிறுவனரீதியான அபிவிருத்தி போன்ற துறைகளில் பல முகாமைத்துவ உசாவுகைகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டன.

நிறுவனம் வியாபார சமூகத்தின் தொழிற்படு பங்காளர் ஒருவராக இருக்கின்ற அதன் முயற்சியில் பொறுப்பேற்கின்ற மற்றுமொரு செயற்பாடே ஊழியருக்கான வாடிக்கையாளர் மையப்படுத்திய பயிற்சியாகும். வாடிக்கையாளர்களில் வங்கியில், நிதி , காப்புறுதி மற்றும் விசேட சேவைகள் போன்ற உற்பத்தி துறையில் ஈடுபட்டுள்ள பொது மற்றும் தனியார் ஆகிய இரு தரப்புசார் நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் அத்தகைய அதிகளவான செயலமர்வுகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

முகாமைத்துவ சபை: நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்று குழுவான முகாமைத்துவ சபையானது இக்காலப்பகுதியில் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக இருந்தது:

பேராசிரியர். உதித் லியனகெ, பணிப்பாளரும் சபையின் தலைவரும்
செயலாளர், உயர் கல்வி அமைச்சு (பிரதிநிதி. திரு பியசேன ரணபுர)
செயலாளர், பொது நிருவாக அமைச்சு (பிரதிநிதி. திரு டப்.எம்.பி.ஜி.விக்கரமசிங்க)
செயலாளர், நிதி அமைச்சு (பிரதிநிதி. கலாநிதி. ஆர்.எச்.எஸ். சமரதுங்க)
பணிப்பாளர் நாயகம், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம், (கலாநிதி ஈ.டி.வீரசிங்க)
தலைவர், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம். (எம்.சுஜீவ முதலிகே)
தலைவர், இலங்கை பொறியியலாளர் நிறுவகம். (கலாநிதி தர்மசிறி த அல்விஸ்)
தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம் (கலாநிதி அருண ஏக்கநாயக்க)

பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ.ஜ.ப (பேராசிரியர். சம்பத் அமரதுங்க)
பணிப்பாளர், இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் (திரு.டப்.எம்.பண்துசேன)

பேராசிரியர். அபேரத்ன பண்டார, நிதித் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
பேராசிரியர். எச்.எச்.டி.பி.ஒபத, மனிதவள முகாமைத்துவ திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர். டி.ஏ.தந்திரிகொட, பௌதீகவியல் திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர். எம்.எல்.ஏ.காதர், பேராதனை பல்கலைக்கழகம்

திரு எம்.என்.ஜுனைட், இணைத் தலைவர், தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

திரு காமினி முனசிங்க, பணிப்பாளர்,சுற்றாடல் மூலவள முதலீடு பிஎல்சி

கலாநிதி தேவப்பிரிய நுகவெல, தலைவர், லிங்க் இயற்கை உற்பத்திகள்

கலாநிதி விக்கிரம வீரசூரிய, இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி

கற்கை சபை: இவ்வாண்டுக் காலப்பகுதியில் கற்கை சபை பின்வரும் உறுப்பினர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது:

வியாபார நிறுவாகத்தில் கற்கை சபை

பேராசிரியர். உதித் லியனகெ, பணிப்பாளர், (மு.ப.நி) தலைவர்
பேராசிரியர். சம்பத அமரதுங்க, பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ.ஜ.ப
பேராசிரியர். டேவிட் இவன்ஸ், வருகைதரு பேராசிரியர்
திரு ஏட்லி பெரேரா, பணிப்பாளர், டினாமிக் கெபிடல் பி.எல்.சி.
கலாநிதி த்ராவிஸ் பெரேரா, சிரேட்ட உசாவுனர், மு.ப.நி
கலாநிதி விக்கிரம வீரசூரிய, இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி
கலாநிதி ஜே.சீ.பீ.விஜேசிங்க, பட்டய கணக்காளர்

பொது நிறுவாகத்தில் கற்கை

பேராசிரியர். உதித் லியனகெ, பணிப்பாளர், (மு.ப.நி) தலைவர்
கலாநிதி எச்.எம்.ஏ ஹேரத், பொதுநிர்வாகத் துறை., ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
பேராசிரியர். எஸ்.டப். ரணசிங்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி லொய்ட் பெர்ணாந்து, நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர், எம்பிஏ

திரு. லலித் வீரதுங்க, சனாதிபதியின் செயலாளர்
கலாநிதி ஜயம்பதி விக்கரமரத்ன, சனாதிபதி சட்டத்தரணி
பேராசிரியர். எம்.டப். விக்ரமாராச்சி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

இவ்வாண்டுக் காலப்பகுதியில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் 2009 – 2011 இற்கான கூட்டாண்மை திட்டத்திற்கமைவாக முகாமைத்துவ சபையினால் வழிகாட்டப்பட்டது. நிறுவகத்தின் சுய நிதியிட்ட நிலைமையை பேணுவதற்கான ஆராய்ச்சி, பட்டக் கற்கைகளை, பயிற்சி மற்றும் உசாவுகை சேவைகள், புதிய கல்விச் செயற்பாடுகள் நிறுவகத்தின் சுய நிதியிடப்பட்ட நிலைமையை பேணுவதற்காக வருமானத்தை உழைத்தல் ஆகிய பிரதான துறைகளில் முழுதுமளாவிய பெறுபேறுகள் ஊக்கமளிப்பதாக உள்ளது.

மாணவர் உள்ளீர்ப்பு:

பாடநெறி	மாணவர் எண்.
வியாபார நிருவாக முதுமாணி	196
சுங்க நிருவாக முதுமாணி	65
எம்பீஏ – சர்வதேச வர்த்தகம் பொருட்கொள்வனவு	66
பொது நிருவாக முதுமாணி	51
எம்பீஏ – மனித வள முகாமைத்துவம்	37
மொத்தம்	**415**

மேற்குறிப்பிட்ட கல்விசார் நிகழச்சித்திட்டங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்டதோடு அறிவின் வளர்ந்துவரும் போக்குகளுக்கு ஏற்றதாக நிகழ்ச்சித்திட்டங்களின் பாடப்பரப்புகள் மேம்படுத்தப்பட்டன.

போட்டித்தன்மையில் முதலிடத்தில் இருப்பதற்காக எம்பீஏ பாடநெறியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்கு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை மாணவர் முகாமையாளர்களுக்கு வழங்கும் பெறுமதியும் மேம்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

அ. **இணைய பாடநெறிகள்** மீளமைக்கப்பட்டுள்ளதோடு கடுமையான உள்ளடக்கத்தையும் தெளிவான வழிகாட்டுதலையும் வழங்குகின்றது.

ஆ. முன்வைக்கும் அமைப்பு : இரண்டு குறிப்பான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று மணித்தியால அமர்வின் மூன்றில் ஒரு பகுதி உரிய வழமையான விரிவுரைக்கு அதாவது விரிவுரை ஆற்றுதல் – ஒதுக்கப்பட்டது. அமர்வின் எஞ்சிய பகுதி காண்பித்தல் உதா (வீடியோ), கேட்டல் (கலந்துரையாடல்/ விவாதம்) மற்றும் செய்தல் (பயிற்சியும் விடய ஆய்வும்) என்றவாறு முதன் முதலாக நேரம் ஒதுக்கப்பட்டது. பீடமானது மாணவர் முகாமையாளர்கள் மீது சாதகமான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு நான்கு வகை முன்வைத்தல் வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டுமென்பதை அறிந்துள்ளதோடு தேவையான கற்றல் விளைவுகளையும் அடையவேண்டும் என்பதையும் அறிந்து வைத்துள்ளது.

இ. வருகைதரு விரிவுரைகள்: தெரிவுசெய்யப்பட்ட தலைப்புகளில் விசேட விரிவுரைகளை நிகழ்த்த கைத்தொழில்துறையில் இருந்து பிரமுகர்கள் வெகுவாக பங்கேற்கின்றனர். இந்த அமைர்வுகள் முன்திட்டமிடப்பட்டதோடு பாடநெறி வெளியிடுகை உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விசேட தோற்றங்கள் பயன்மிக்கதாக உள்ளதோடு, அவை உண்மையில் மு.ப.பி எம்பீஏ பாடநெறிகள் மற்றும் அதன் ஏனைய போட்டியாள்களிடையே முக்கிய வேறுபாட்டை காட்டிநிற்கின்றது.

ஈ. புள்ளிகளை வெளியிடல்: பீடம் புள்ளிகளை உரிய காலத்திற்கு வெளியிடுவதற்கான ஒரு காலக்கெடுவை அமைத்திருக்கின்றது. அதாவது இறுதி பரீட்சையிலிருந்து 21 நாட்களாகும். இது கண்டிப்பாக பின்பற்றப்படுவதோடு பீடத்தின் ஒரு கே.பி.ஐ யும் (பிரதான செயலாற்றுகை சுட்டிக்காட்டி) கொண்டமைந்திருக்கின்றது.

உ. மாணவர் மதிப்பீடு: இது பாடநெறி குறித்த மாணவரின் கருத்தோட்டத்தின் முக்கியதொரு மதிப்பீடாகும். தனிப்பட்ட மாணவர்களின் தவணை முடிவு மதிப்பீடானது சுருக்கமாக பெறப்பட்டு மாணவர் முகாமையாளர்களினால் கருதப்பட்டவாறான அவர்களது செயலாற்றுகை தொடர்பில் சம்பந்தப்பட்ட பீட அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இது இன்னொரு பீட கே.பி.ஐ ஆக கருதப்படுகின்றது.

பீட மூலவளங்கள்:

நிரந்தர விரிவுரையாளார்கள், ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்கள், வருகைதரு விரிவுரையாளர்கள்/தொழில்நிபுணர்களை உள்ளடக்கிய பின்வரும் பீட குழு நிறுவகத்தில் 2010 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பணிபுரிந்தது:

பேராசிரியர். உதித் லியனகெ, மு.டி, எப்சிஜஎம், எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), பி.எச்.டி. (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), பணிப்பாளர், மு.ப.நி

கலாநிதி. திராவிஸ் பெரேரா, எம்ஜஈடி (ஐ.இ), எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), பி.எச்.டி. (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), சிரேட்ட உசாவுனர்

கலாநிதி ஏ.கே.எல.ஜயவர்தன, பீ.டெக். (மதுரை.), எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), பி.எச்.டி (கென்ப்.), சிரேட்ட உசாவுனர்

கலாநிதி அஜந்த தர்மசிரி, பீ.எஸ்சி. பொறி.(மொறட்டுவை), எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), பி.எச்.டி. (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),சிரேட்ட உசாவுனர்

திரு. சிசிர அதுரலியகே, பீ.எஸ்சி. பௌதீ (ருஹுன, எம்எஸ்சீ க.வி. (கொழு.), உசாவுனர்

பேராசிரியர். திலக் பொன்சேக்கா, பீஏ(சிலோன்), எல்எல்பீ (கொழு.), எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), எம்ஏ (கொழு.), பி.எச்.டி. (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),சட்டத்தரணி

பேராசிரியர். சுத்தத ரணசிங்க, பீபிஏ (வித்யா), எம்பிஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), பி.எச்.டி. (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),
கலாநிதி விக்கிரம வீரசூரிய, எல்எல்பீ (பேரா.), பீஎச்டி. (இலண்டன்), சட்டத்தரணி

கலாநிதி லொய்ட் பெர்ணாந்து, எம்எஸ்சி. (மொஸ்கோ), பீஎச்டி. (சசெக்ஸ்)

திரு. கால்டன் சமரஜீவ, பீஏ(சிலோன்), பீ.ஈடி, (குயீன்ஸ்), டி.எட். (இலண்டன்), டிப்ரீஈஎப்எல்

பேராசிரியர். டேவிட் இவன்ஸ், பீஏ(சிறப்பு), எம்எஸ்சி , டி.எட்

திரு. மரியோ பொன்சேக்கா, எம்சிஜஎம்(ஐ.இ), எப்எஸ்சீஎம்ஏ, எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),

கலாநிதி பெனிலோபே ஹுட், டிஎம்எஸ் (எட்), எம்எஸ்சி.(க.மு.), பீஎச்டி.. (அஞ்சிலா)

திரு. மபாஷ் இஷாக், பீ.எஸ்சி. (பொறி), எம்எஸ்சி. (பொரு), எம்எஸ்சி (பொறி), சிஜஎஸ்ஏ

திரு. அஜந்த மதுரப்பெரும, ஏஜபீ (இல), எப்சீஎம்ஏ, (ஐ.இ), சீஎப்ஏ, எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),

கலாநிதி தாரிக் காட்டி, பீ.எஸ்சி. (ரைட் ஸ்டேட்), எம்பீஏ, பீஎச்டி. (ஜியேரஜியா)

திரு. சன்ன குணவர்தன, பீ.எஸ்சி. (சிறப்பு), ஏசிஏ, ஏசீஎம்ஏ, எம்பீஏ (யுஎஸ்வ்),

திரு. சன்ஜீவ் ஜயரத்னம், க. பொறி, டிம்பீசிஎஸ், பீ.எஸ்சி. (மன்சஸ்டர்), எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),

திரு. திஸ்ஸ ஜயதிலக்க, பீஏ(சிலோன்), எம்ஏ(வேக்), எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),

திரு. ஹுசைன் முசாஜி, எப்சீஏ, எப்சீஎம்ஏ, எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),

பேராசிரியர். சாதிஸ் சிந்தே, எம்எஸ்சி எம்பீஏ ,பி.எச்டி (பூனே)

திரு. சேனக வீரசூரிய, பீ.எஸ்சி. (ஏஎன்யு), எம்ஐரீ (கண்பரா)

திரு. சுனில் விஜேசிங்க, எப்சீஎம்ஏ,பொறி., எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப),

திரு. ரவி எதிரிசிங்க, எம்பீஏ (மு.ப.நி – ஸ்ரீ.ஜ.ப), ஏ.சிஎம்ஏ.(ஐ.இ), எப்எஸ்சீஎம்ஏ,

கற்பித்தல் பீடமானது பாடநெறி பணிகளை நடாத்துதல், ஆய்வு பத்திரங்கள், கலாநிதி மற்றும் முதுமாணி பட்ட மாணவர்களின் தேர்ச்சி கருத்திட்டங்களை மேற்பார்வைசெய்தல் போன்ற பணிகளில் தம்மை ஈடபடுத்தியிருந்தது.

பட்டப்பின்படிப்பு, டிப்புளோமா மற்றும் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களில் கல்விசார் பணியின் வெற்றியானது தர தராதரங்கள், பொருத்தப்பாடு மற்றும் கற்கை நெறிகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அடையாளங்காணப்பட்டன.

கல்விசார் பாடநெறிகளின் தரம் மற்றும் தராதரங்கள் பல்வேறு வழிமுறைகளில் தீர்மானிக்கப்பட்டன. முதலாவதாக ஒவ்வொரு கற்கை துறையிலுமான திறமைச் சித்திகளின் எண்ணிக்கை கற்றலில் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுவதாக எதிர்பார்க்கப்பட்டது. 2009 இல் 10 வீதமாக இருந்த திறமைச் சித்திகளின் மட்டத்தை 2010 ஆம் ஆண்டில் 12 வீதமாக அதிகரிப்பதற்கு கல்விசார் பதவியினர் கணிசமான முயற்சியை எடுத்தனர்.

இந்த இலக்குகள் வெளியிடப்பட்ட மாணவர் ஆராய்ச்சி மற்றும் கருத்திட்ட பணி என்பவற்றினூடாக குறிப்பாக அடையப்பெற்றதோடு இது தரத்தை மதிப்பிடுவதற்கான மற்றொரு நடவடிக்கையாக இருந்தது.

கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் காலரீதியான மீளாய்வுக்கு மேலதிகமாக நிறுவகத்தில் சமகாலத்தில் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகளை பகிரங்கமாக கலந்துரையாடுவதற்காகவும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் செயற்பாடுகளை அனைத்து வழிமுறையிலும் மேம்படுத்துவதற்கான மட்டங்களின்

வழிமுறைகளை கலந்துரையாடுவதற்காகவும் வருடாந்தம் பீட நகர்வுகள் நடாத்தப்படுகின்றன. இந்த பீட நகர்வுகள் உள்ளக முறைமைகளை தரமுயர்த்துவதில் குறிப்பாக எம்பீஏ பாடநெறி மற்றும் ஏனைய ஒத்த நிகழ்சித்திட்டங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் மிகவுமே பயனுள்ளவையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கல்விசாரா பதவியினர்: நிறுவகம் இவ்வாண்டுக் காலப்பகுதியில் 21 முழு நேர ஊழியர்களை கொண்டதாய் அமைந்திருந்தது. சுகாதார சேவை, துப்பரவு, பாதுகாப்பு மற்றும் சிற்றுண்டிசாலை வசதிகள் வெளிவளமாக பெறப்பட்டன.

பீடம்/கிளை	மிகவும் சிரேஷ்ட	சிரேஷ்ட பதவினர்	கனிஷ்ட பதவியினர்	சிற்றூழியர் கள்
நிருவாகம் மற்றும் கல்விசார் செயற்பாடுகள்	01	02	04	03
த.தொ. நிலையம்	01	02	-	-
நூலகம்	01	03	-	-
பணிப்பாளர் அலுவலகம்	01	-	-	-
நிதி	01	-	02	-
மொத்தம்	**21**			

ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள்:

விடயம்	வெளியிடப்ப ட்ட	வர்த்தகமயப் படுத்தப்பட்ட	முன்வைக்கப் பட்டது
அ. எம்பீஏ மாணவர்களின் ஆராய்ச்சிகளின் எண்.	--	--	200
ஆ.பருவகால சஞ்சிகைகளின் எண்.	04	04	04
இ.புத்தகங்களின் எண்.	05	05	05
ஈ.கட்டுரைகளின்	20	(தின	15

எண்.(பத்திரிகையில்)		செய்தித்தாளில் வெளிவந்தவை)	
மொத்தம்	**29**	**09**	**226**

இலங்கையில் முகாமைத்துவத்துறையிலான ஆராய்சியானது ஆரம்பகட்டத்திலேயே உள்ளது. இத்துறையில் ஆராய்ச்சி மரபொன்றை நாம் இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டிய நிலையில் இருப்பதோடு உண்மையான சவால் யாதெனில் எமது பிரதான ஆராய்சி முயற்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு மேம்படுத்தப்படக்கூடிய செயற்களமொன்றை கண்டுபிடிப்பதாகும். ஆதலால் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் ஆராய்சிசக்கான தரமுயர்த்தல் முறைமைகளையும் தர்க்கரீதியான அனுகுமுறைகளையும் நாடுகின்றது. இதன்மூலமே உள்ளீடுகளின் தரமானது மதிப்பிடத்தக்க மட்டங்களுக்கு மேல்நோக்கி தள்ளப்படமுடியும் என்பதோடு நிறுவகத்தின் ஆராய்ச்சி நோக்கங்கள் இலங்கைச் சூழலில் அறிவிலில் முக்கிய இடைவெளிகளுக்கு தீர்வுகாணக்கூடியதாக இருக்கும் என்பதோடு 'அறிவை' சமுக ரீதியாக பயனுள்ளதாக மாற்றவும் முடியுமாக இருக்கம்..

1996 இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் காலாண்டு சஞ்சியான இலங்கை முகாமைத்துவ சஞ்சியை தொடர்ந்தும் வெளியீடு மற்றும் கலந்துரையாடலுக்கான மன்றமொன்றாக இருந்து வருகின்றது. இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையின் பிரதான நோக்கம் யாதெனில் முகாமைத்துவத்துறையில் விடயங்கள், நடைமுறைகள் அபிவிருத்தி சார்ந்த விடயங்களுக்கான ஊடகமொன்றாக இருப்பதோடு ஆராய்ச்சியின் பெறுபேறுகளை பரப்புவதற்கும் இந்த துறைகளில் கற்பதற்குமாக ஊடகமொன்றாக இருத்தலுமாகும். சஞ்சிகையானது முகாமைத்துவத்துறையில் புத்திஜீவிகளும் செயற்பாட்டாளர்களும் தமது பணிகளை வெளியிடுவதற்கான ஊடகமொன்றாகவும் இருப்பதுமாகும்.

நவீன முகாமையாளர்களின் எழுச்சிபெற்றுவருகின்ற தேவைகளுக்கு பதிலளிக்கும் முகமாக வருடத்திற்கு இரு முறை வெளியிடப்படுகின்ற தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சந்தைக்கு தொழில்சார் முகாமையாளர் சஞ்சிகையை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் யாதெனில் விளங்குவதற்கு இலகுவான முறையொன்றில் முன்னேற்றகரமான முகாமைத்துவ அறிவை பரப்புவதாகும். அது குறிப்பான தொழிற்பாட்டு சார்பை கொண்டதாக இல்லை மாறாக சிக்கலான குழப்பகரமான சூழலொன்றில் தொழிற்படுகின்ற நவீன முகாமையாளருக்கான சமகால மற்றும் முக்கியத்துவமிக்க விடயங்களுக்கு தீர்வு காண்கின்றது.

நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்:

விடயம்	சமூகமளித்தவை	பூர்த்திசெய்யப்பட்டது	எண்.
அ. கூட்டாண்மை துறைக்கான முகாமைத்துவ அபிவிருத்தியும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும்.	அனைத்து	பூர்த்திசெய்யப்பட்டது	06
ஆ. எம்பீஏ மாணவர்களுக்கான செயலமர்வு	அனைத்து	பூர்த்திசெய்யப்பட்டது	05
இ. பீடத்திற்கான செயலமர்வு	அனைத்து கல்விசார் பதவியினர்	பூர்த்திசெய்யப்பட்டது	01
மொத்தம்			12

ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள்:

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம், கன்பரா பல்கலைக்கழகத்தின் சுங்க மற்றும் கலால்வரி கற்கைகளுக்கான நிலையம் என்பன இணைந்து சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருட்கொள்வனவில் ஒரு வியாபார நிருவாக முதுமாணி பட்ட பாடநெறியை வடிவமைத்திருக்கின்றன. நவீன பொருளாதாரத்தில் சர்வதேச வர்த்தகம் பிரதான பகுதியாக இருப்பதோடு இதில் கூட்டாண்மை மற்றும் தனிநபர் மட்டங்களில் திறனை மேம்படுத்துவதற்கான தேவையொன்றையும் கொண்டிருக்கின்றது.

பாடநெறியின் பாடவிதானம் தேவையான அறிவு மற்றும் தேர்ச்சிகளை வழங்கும் நோக்குடனும் துறையின் பாரிய தேவைகளை நிவர்த்திக்கும் வகையிலும் சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருட்கொள்வனவின் பிரதான அடிப்படைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

மேலும் இது மாணவர்களை சர்வதேச வர்த்தகம் மற்றும் வியாபாரத்தின் பாராட்டத்தக்க நிலைமையிலிருந்து பொருட்கொள்வனவு தொழிற்பாடுகளையும் வழங்கல் சங்கிலி செயற்பாடுகளையும் முகாமைசெய்தல் வரையான ஆழமான

புரிந்துணர்வு நிலைக்கு முன்னேற்றகரமாக இட்டுச்செல்வதற்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. அத்தகைய தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளினுள் உள்ள சட்டரீதியான சட்டகமானது மேற்கொள்ளப்படவுள்ளதோடு நிகழ்ச்சித்திட்டத்தில் தெளிவாக இடப்பட்டு விரிவாக விளக்கப்படும்.

மீண்டெலும் செலவினம்:

	2009 (ரூபா)	2010 (ரூபா)
அ. ஆள்சார் செலவினங்கள்	18,647,494	19,243,443.
ஆ. போக்குவரத்து	1,099,928	1,681,218
இ. வழங்கல்கள்	4,529,871	6,028,785
ஈ. பராமரிப்பு	1,096,764	3,150,345
உ. ஒப்பந்த சேவைகள்	12,066,360	13,625,720
ஊ. ஏனையவை	21,501,812	24,304,280
எ. கருத்திட்டத் தன்மை செலவினம்	6,042,526	15,224,206
மொத்த செலவினம்	64,984,755	83,257,997

மூலதன செலவினம்:

விடய விபரங்கள்	2009 ரூபா.	2010 ரூபா
அ. தளபாடம் மற்றும் அலுவலக கருவிகளின்	1,778,108	4,785,565

பெறுகை		
ஆ. இயந்திர பெறுகை	-	38,915
இ. கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் பெறுகை	-	-
ஈ. ஏனையவை	385,397	1,474,784
உ. காணி மற்றும் கட்டிடங்களின் புனரமைப்பும் புத்தாக்கமும்	2,851,066	7,845,552
மொத்தம்	5,014,571	14,144,816

கருத்திட்டங்கள் (உள்ளூர்/ வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட):

பெயரும் விபரமும்	கடன் /கொடை	நிதியளிப்பு முகவராண்மை≠	TCE ரூபா	RFA ரூபா	DF ரூபா
உசாவுகை சேவைகள் அபிவிருத்தி, திட்டமிடல் e-அரசாங்க வழங்குககை அரசாங்க பிரதானிக்கான பயிற்சி புத்தாக்க அலுவலர்கள்	கொடை (உ.வ)	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை - இலங்கை	21,190,000		
மொத்தம்			**21,190,000**		

கருத்திட்ட செலவினம் (உள்ளூர்/ வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட):

பெயர்	**TCE Rs.**	**2009 இல் செலவி. ரூபா**	**2010 இல் செலவி. ரூபா**	**31.12.2010 உள்ளவாறான அதிகரித்து வரும் செலவினம்**	**% பௌதீக முன்னேற்றம்**

பிரதம புத்தாக்க உத்தியோகத்தர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – பி.பு.உ **மொத்தம்**	21,190,000	-	5,257,655	5,257,655	35% (சுமார்.)

நிதிசார் முன்னேற்றம் (செலவினம்):

விடயம்	**2010 இல் ஏற்பாடு** ரூபா	**2010 இல் செலவினம்** ரூபா	**சேமிப்பு/மிகை** ரூபா
அ. கருத்திட்டம் தவிர்ந்த மீண்டெலும்	77,522,000	83,257,997	(5,735,997)
ஆ.கருத்திட்டம் தவிர்ந்த மூலதனம்	11,800,000	14,144,816	(2,344,816)
இ. கருத்திட்டம் – உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட	-	-	-
ஈ. கருத்திட்டம் – வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட	5,257,655	5,257,655	-
மொத்தம்			

நிதிசார் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமானம்):

